சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி [தன்னாட்சி]
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி [மகளிர்]
வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*

**RAJA PUBLICATIONS**
**10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.**
**Mobile : +91-9600535241**
**website : rajapublications.com**

**19** பகுதி-4
Part -4

Scanned with CamScanner

முனைவர் ம. கவிதா எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி
தமிழ்த்துறைத் தலைவர், தமிழ் உயராய்வுத்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

# முகவுரை

உலகின் முதல் மொழியாகிய எம்மொழித் தமிழ் உலகிற்குப் பல மொழிகளைக் கொடுத்தது. எம்முடைய மொழிக்கு எம்மொழியிலிருந்தும் எக்காலத்தும் எதுவும் தேவையிருந்ததில்லை. புதிய பொருட்களை உலகம் பெற்றெடுக்கும் போதெல்லாம் தனக்குத் தேவையான சொற்களைத் தானே உருவாக்கிக் கொள்ளும் வலிமை கொண்டது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மொழியில் உருவானவற்றை ஆய்வாக உலகிற்கு எடுத்துச் சொல்லும் **‘நவீனத் தமிழாய்விதழ்’** பணிகளில் மகிழ்வுடன் தொடர்ந்து பங்கேற்கும் ஆய்வாளர்களுக்கு ஆசிரியர்குழு நன்றி கூறுகிறது. தொடர்ந்து பங்கேற்கத் தங்கள் முன் வேண்டுகோள் வைக்கிறது.

நன்றியுடன்

ஆசிரியர் குழு

Scanned with CamScanner

ISSN : 2321 - 984X


| | | | |
|---|---|---|---|
| 152. | க. திலகவதி | மகாகவி பாரதியாரின் சாதி ஒழிப்புச் சிந்தனைகள் | 819-823 |
| 153. | ஏ.வீரப்பன் | சங்க மகளிர் மாண்புகள் | 824-830 |
| 154. | ஆ. அந்துவான் | சங்க இலக்கியங்களில் வாழ்வியல் | 831-833 |
| 155. | ச. குருஞானாம்பிகா | தமிழ் இலக்கியத்தில் பெண் படைப்பாளர்களின், இயங்குதளம் | 834-837 |
| 156. | க. சிவமணி | இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சங்க இலக்கிய உரையாசிரியர்கள் | 838-840 |
| 157. | இரா. மல்லிகா | ஆசாரக்கோவை உணர்த்தும் வாழ்வியல் நெறிமுறைகள் | 841-845 |
| 158. | ஸ்ரீ. அழகுலெட்சுமி | உறவுகளால் தோன்றும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் | 846-851 |
| 159. | வீ. பூமிநாதன் | சங்க அக இலக்கியத்தில் ஊழ்வலி வாதம் (FATALISAM) | 852-855 |
| 160. | ப. கற்பகராமன் | திருமுருகாற்றுப்படை மற்றும் கந்தரலங்காரத்தில் பெண் வருணனை ஒப்பீடு | 856-858 |
| 161. | ச. கௌசல்யா தேவி | பழந்தமிழர் வாழ்வியல் | 859-865 |
| 162. | செ. திருச்செல்வி | ஆன்மிகத் தேடல்கள் (SPIRITUAL QUESTS) | 866-871 |
| 163. | ஆ. சந்திரசேகரன் | சிவவாக்கியர் காட்டும் கிரியா யோக நெறி | 872-876 |
| 164. | ஆ. இன்பவள்ளி | நாட்டுப்புறப் பண்பாடு தொடர்பான பழக்கவழக்கங்கள் | 877-879 |
| 165. | ரா. ரவிச்சந்திரன் | தமிழ் இலக்கியங்கள் காட்டும் மருத்துவம் சார்ந்த உணவு முறைகள் | 880-882 |
| 166. | கி. பாலமுருகன் | சங்க இலக்கியங்களில் பெண்ணியம் | 883-885 |
| 167. | ஆ. அமுதா & கு. கருமுருகானந்தராஜன் | செம்மொழி இலக்கியங்களில் போர்த் தொழிலாளர் வாழ்வியல் | 886-889 |
| 168. | செ. மகாலிங்கம் | 'பூனாச்சி அல்லது ஒரு வெள்ளாட்டின் கதை' நாவலில் பூனாச்சியின் இருப்பும் தகர்வும் | 890-893 |
| 169. | பா. வீரகணேஷ் | பெண்ணியம் | 894-899 |
| 170. | க. அருள்முருகன் | திருக்குறளில் அறிவுடைமை | 900-903 |
| 171. | ச. ஆறுமுகம் & த. ஜெயக்குமார் | கற்றல், கற்பித்தல் அணுகுமுறை | 904-922 |
| 172. | ம. புவனேஷ்வரி | கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் வாழ்வியல் சிந்தனைகள் | 923-928 |
| 173. | மா. அம்மு & வே. மணிகண்டன் | விழி. பா. இதயவேந்தனின் 'பள்ளத் தெரு' சிறுகதையில் வாழ்வியல் | 929-933 |
| 174. | W. சார்லட் அற்புதமணி | பரிசுத்த வேதாகமம் வெளிப்படுத்தும் பெண்களின் வாழ்வியல் | 934-940 |
| 175. | த. திவ்யா | கொங்கு வட்டாரத்தில் நடுகற்கள் | 941-945 |
| 176. | அ. இம்மானுவேல் | சூர்யகாந்தன் சிறுகதைகளில் சமூகச் சிக்கல்கள் | 946-952 |
| 177. | த. கோகுல் குமார் & இரா. மல்லிகா | திருஞானசம்பந்தர் வகுத்துக் காட்டும் வாழ்வியல் | 953-958 |
| 178. | ப. ஜெகநாதன்&ந. திலகம் | மகாபாரதத்தில் துரோகம் | 959-966 |
| 179. | அ. கமலசேகர் | கொல்லிமலை மக்களின் இயற்கை அமைப்பும், தொழில்களும் | 967-971 |
| 180. | சா. விட்டில் பிளவர் & கி. கிறிஸ்டல் சுஜி | குறுந்தொகையில் தமிழர் வாழ்வியல் | 972-978 |
| 181. | இரா. குமரகுருபரன் | கு.சி.பா. - கி.ரா. தமிழ்ச் சிறுகதைகள் வழி 1950களில் உழுகுடி வாழ்வியல் | 979-987 |
| 182. | B. MATHIVANAN & D. JAYAKUMAR | தமிழ் இலக்கியங்களில் "பெண்ணியம்" | 988-994 |
| 183. | ப. மேகலா | ஐம்பெருங்காப்பியங்களில் நிலையாமைச் சிந்தனைகள் | 995-999 |
| 184. | மு. மோகனலட்சுமி | உ.வே.சா அவர்களின் வாழ்வும் பதிப்பு வழிகாட்டிகளும் | 1000-1006 |
| 185. | கு. நந்தினி & மு. பெரியசாமி | கம்பராமாயணத்தில் அனுமனும் அறமும் | 1007-1014 |
| 186. | க. நித்யா | குறுந்தொகையில் தலைமக்களின் இல்லற மாண்பு | 1015-1017 |
| 187. | பி. செல்வராஜ் | சா.கந்தசாமி சிறுகதைகளில் வறுமை | 1018-1021 |
| 188. | ப. பூமணி & அரங்க. லோகாம்பாள் | இனிமையான வாழ்க்கைக்கு இனியவை நாற்பது | 1022-1026 |
| 189. | அ. பிரபா & ந. அய்யப்பன் | சங்க இலக்கியத்தில் காட்டெரிப்பு வேளாண்மை | 1027-1029 |
| 190. | எஸ். பிரேமா | என்.ஸ்ரீராமின் சிறுகதைகளில் சாமானிய மனிதர்கள் | 1030-1034 |
| 191. | க. புஷ்பலதா | ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகளில் முதுபெண்டிர் நிலை | 1035-1038 |
| 192. | மு. சத்யபிரியா | பாவேந்தரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள் | 1039-1044 |
| 193. | ஐ. சண்முகப்பிரியா | மருதமலை அலங்காரத்தில் முருகனின் மரபுகள் | 1045-1049 |
| 194. | மா. சிவக்குமார் | தொட்டிய நாயக்கர்களின் வாழ்வியல் சடங்குகளில் பூப்பு சடங்குகள் | 1050-1055 |
| 195. | இரா. சுபாஷினி & வே. மணிகண்டன் | சஞ்சாரம் புதினத்தில் நாதஸ்வரக் கலைஞர்களின் வாழ்வியல் | 1056-1061 |
| 196. | அ. சுமதி & செ. ஜெயந்தி | இருளப்பட்டி நடுகற்களும் அதன் வரலாறும், வழிபாடும் | 1062-1066 |
| 197. | த. சுதா & தி. சாந்தி | காற்று மாசுபாடுகளால் ஏற்படும் சுவாசம் தொடர்பான சிக்கல்களுக்கு பிராணாயாமப் பயிற்சிகள் | 1067-1072 |
| 198. | ஆ. திலகவதி | "நீர்ப்பழி" சிறுகதைகள் காட்டும் குழந்தை தொழிலாளர்களின் வாழ்வியல் | 1073-1079 |
| 199. | ப. வரதராஜ்&ந. திலகம் | நாலடியார் உணர்த்தும் இல்லற நெறிகள் | 1080-1086 |
| 200. | க. விஜயா | தமிழ்மொழி மேம்பாட்டிற்கு கலைச்சொல்லின் அவசியம் | 1087-1090 |
| 201. | செ. யசோதா & செ. ஜெயந்தி | கொங்கு வேளாள பண்ணைக்குல மக்களின் நம்பிக்கைகள் | 1091-1096 |


Published by : Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned with CamScanner

# கொங்கு வேளாள பண்ணைக்குல மக்களின் நம்பிக்கைகள்

செ. யசோதா

பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் செ. ஜெயந்தி

நெறியாளர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச்சுருக்கம் :

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு, அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. சிந்தனைத் திறன் குறைவாக உள்ள சமூகத்தில் நம்பிக்கைகள் அதிகமாக காணப்படுகின்றன. குறிப்பாக பாமர மக்களிடம் இவை இடம் பெற்றுள்ளன. பாமர மக்களின் வாழ்வில் மட்டுமல்லாமல் கல்வியறிவு பெற்றவர்கள் மற்றும் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் வாழ்விலும் நம்பிக்கைகள் இடம் பெற்றிருக்கின்றன. பழமையான எல்லா இடங்களிலும் பல நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. அவற்றில் பலவும் இன்று வரையில் ஆற்றலோடு வாழ்ந்து வருவது வியப்பிற்குரியதாகும். பண்ணைக்குல குலதெய்வக் கோயில்களில் நம்பிக்கைகளின் அடிப்படையில் பல சடங்குகளும் வழிபாடுகளும் நிகழ்த்தப்படுகின்றன.

## முன்னுரை :

மனிதர்களே தோற்றுவித்துக் கொண்ட நிலையில் நம்பிக்கை சமுதாய மானிடவியல் சார்ந்து அமைகின்றன. வாழ்வில் தமக்கு ஏற்படும் பல்வேறு அனுபவங்களால் இவற்றைச் செய்தல் தரும். இவற்றைச் செய்தல் தகாது என்று பல காலத்திற்கு முன்னர் பிரித்து வைத்த செய்திகள் எல்லாம் காலப்போக்கில் காரணம் அறியாமலே நம்பிக்கைகளாகவும், பழக்க வழக்கங்களாகவும் மாறுகின்றன.

மக்களால் உருவாக்கப் பெற்ற நம்பிக்கைகள் என்பது முதலில் சமயத்தின் தாக்கத்தால் அச்ச நிலை தவிர்க்கும் சின்னமான தெய்வ நிலையில் இருந்து தொடங்குகிறது. நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

## பூவாக்குக் கேட்டல்

பண்ணைக்குல குலதெய்வக் கோயில்களில் மலர் வழிபாடு, படையல் வழிபாடு முடிந்த பின்னர் பூவாக்குக் கேட்டல் நடைபெறுகிறது.

> **“எச்செயலையும் தொடங்கும்முன் தெய்வத்தை வழிபட்டுதான் தொடங்குகின்றனர். இவ்வழிபாட்டில் பூக்கேட்டலின் மூலம் தமது எண்ணங்களை அம்மனிடம் முறையிடுகின்றனர்”[1]**

என்ற கருத்து நினைவு கூறத்தக்கதாக உள்ளது. இப்பண்ணைகுல மக்கள் தாங்கள் நினைத்த காரியம் கைகூடுதல், திருமணம் நடைபெறல், குழந்தைப்பேறு வேண்டுதல், நிலபுலன்கள் வாங்குதல், வீடு வாகனம் கால்நடைகள் வாங்குதல், வேலைவாய்ப்புகள், விவசாயம் செழிப்படைதல், உடல்நலம் பெற வேண்டுதல் முதலானவற்றிற்குத் தெய்வத்திடம் பூவாக்குக் கேட்கின்றனர்.

பூசாரி கடவுளை வேண்டிப் பாடிவாக்குக் கேட்கும்போது, வலப்பக்கம் பூ விழுந்தால் நினைத்த காரியம் கைகூடும் என்றும் இடப்பக்கம்



Scanned with CamScanner

பூ விழுந்தால் காரியம் தடைபடும் என்றும் நம்பப்படுகிறது. வலமும், இடமும் அல்லாமல் வேறு திசையில் பூவிழுவதும் உண்டு. பூசாரி அதனை 'நாமவாக்கு' என்று கூறுகின்றார். பூ இடப்பக்கமோ அல்லது நடுவிலோ விழுந்தால் கடவுளை 3 அல்லது 5 வாரங்கள் தொடர்ந்து வந்து வழிபடுமாறு பக்தர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**"பூக்கள் இரண்டு விதமாக வைத்து ஒன்றை இவர்கள் நினைத்த வெற்றிக்கும் மற்றொன்றை தோல்விக்கும் வைப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பர்.சிவப்புப் பூக்கள் வந்தால் எண்ணிய காரியம் நிறைவேறும் என்றும், வெள்ளைப்பூக்கள் வந்தால் எண்ணிய காரியம் நிறைவோறது என்ற நம்பிக்கையும் மக்களிடம்நிலவி வருகின்றது."[2]**

என்ற கருத்து பூவாக்குக் கேட்டல் குறித்து விளக்குகிறது.

### தீர்த்தம் போடுதல்

தூக்கமின்மை, பசியின்மை, உறக்கத்தில் துள்ளி விழுதல் முதலான அறிகுறிகள் பெரியவர்களிடம் காணப்பட்டால் அவர்களுக்குக் குழந்தைகளுக்குச் செய்வதைப் போலத் திரிசுற்றிப் போடுவதுடன் பூசாரி மந்திரத்தைக் கூறியவாறு அவர்தம் முகத்தில் தீர்த்தத்தை வேகமாக வீசி அடிக்கிறார். பிறகு, முகத்தில் திருநீறு வைக்கின்றார். தீர்த்தத்தை அடிக்கின்ற நிலையில் பேய் முதலான சக்திகள் பற்றியிருக்கும் நபராக இருந்தால் அவர்களிடமிருந்து அது வெளிப்பட்டு ஆடத் தொடங்கும் அவ்வாறின்றி இயல்பாக இருந்தால் அந்த நபர் இயல்பானவர் என அறியப்படும்.

### வலம் வருதல்

கோயிலின் கருவறைக்கு வெளியே சுற்றி வருதலை வலம் வருதல் என்பர். அம்மனைப் பார்த்து வணங்கிய பின் வலம் வந்து தங்களுடைய வேண்டுதலைக் கூறினால் செவி சாய்த்துக் குறைகளைக் கேட்டு நிவர்த்திச் செய்து கொடுப்பாள் என மக்கள் நம்வூகின்றனர். இது சிறப்பான நம்பிக்கையாகவும் கருதப்படுகிறது. வலம் வருதல் வெற்றியை அளிக்கும். ஆக்கத்தைத் தரும் என்று தமிழர்கள் நம்பினர்.

**"நல்வாயில் போத்தந்த பொழுதினான் எல்லா! கடவுட்
கடிநகர் தோறும் இவனை வலங் கொளீஇவர்
எனச் சென்றால் விளங்கினை"[3]**

என்ற பாடல் வலம் வருதல் பற்றித் தெரிவிக்கிறது. மேலும் வலம்படுத்தோள், வலம்படுதானை என்பன போன்ற சொற்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றிருப்பதையும் கூறலாம். வலம் வருவோர்க்குத் தீங்கு நீங்கி நன்மை கிடைக்கும் என்றும், வலம் வருவோரைக் காணல் நற்பேறு கிட்டும் என்றும் நம்வூகின்றனர்.

### சிதறு தேங்காய் உடைத்தல்

கண்ணேறு கழித்தல் என்னும் சடங்கிற்காகச் சிதறு தேங்காய் உடைத்தல் நிகழ்வு நடைபெறுகிறது. சிதறு தேங்காய் பல்வேறு துண்டுகளாக சிதறுண்டு போவது போல் ஊருக்கு ஏற்படும் தீங்குகளும், துன்பங்களும் பல்வேறு துண்டுகளாக சிதறுண்டுப் போகும் என்றும் தீய ஆவிகள் இச்சிதறு தேங்காய்களை ஏற்றுக் கொண்டு அகன்றுவிடும் என்றும் எண்ணிச் சிதறு தேங்காய் உடைத்தலைச் செய்கின்றனர். இது குறியீடு சார்ந்த நம்பிக்கையாகும்.

### திசைப் பற்றிய நம்பிக்கை

பெரும்பாலும் கிராமப்புறத்தில் அமைந்த கோயில்கள் வடக்கு திசை நோக்கியும், கிழக்கு திசை நோக்கியும் அமைக்கப்பட்டுள்ளது.

**"காளி கோயிலை வடக்கு நோக்கியும், மாரி கோயிலை
கிழக்கு நோக்கியும்அமைப்பது மரபாகும்"[4]**

கிழக்கு திசை இந்திரனுக்குத் தொடர்பானது. சூரியனின் பார்வை கோயிலின் மீது பட வேண்டும்



Scanned with CamScanner

என்பது முக்கியக் காரணமாகும். இதனால் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்பின் அரண்மனைகளும், வீடுகளும் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டன. வடக்கு திசை குபேரனுக்கு உரியது. வடக்கு திசை பார்த்தும் கோயில் கட்டலாம் என்பர். பண்ணைக்குல கோயிலுக்கு உட்பட்ட கீரம்பூர் எட்டுக்கை அம்மன் கோயில் வடக்கு நோக்கியும், ஏளூர் பண்ணையம்மன் கோயில் கிழக்கு நோக்கியும் அமைந்து காணப்படுகிறது.

## நேர்த்திக்கடன்

மக்கள் இறைவனை வணங்குகின்ற போது தங்களிடம் உள்ள வறுமை அகலவும், நோய்கள் நீங்கவும், பகை ஒழியவும், வெள்ளாமை விளையவும், செல்வம் பெருகவும் நல்ல வாழ்வு கிடைக்கவும் வேண்டுகின்றனர். தாங்கள் எண்ணியது நிறை வேறினால் அது தாங்கள் கும்பிட்ட தெய்வத்தால் நேர்ந்தது என நம்புகின்றனர். தங்களது விருப்பத்தைத் தெய்வம் நிறை வேற்றினால் அதற்கு நன்றிக் கடனாக ஏதேனும் ஒரு பொருளையோ அல்லது பூசையோ, பொங்கலோ வைப்பதாக உறுதி அளிப்பர். இவ்வாறு இறைவனிடம் தங்கள் வேண்டுதல் பலிக்க மக்கள் நன்றிக் கடனாக வழங்குவோம் என்பது நேர்த்திக்கடன் ஆகும். தங்களது வேண்டுதல் நிறை வேறினால் நேர்த்திக் கடனைத் தவறாமல் செலுத்தும் மரபினை நாட்டுப் புற மக்கள் கொண்டுள்ளனர். நேர்த்திக்கடனாக வழங்கும் பொருட்கள் மக்களின் பொருளாதார வசதிக்கு ஏற்ப அமைகின்றது. மக்கள் செலுத்தும் நேர்த்திக் கடனைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- முடி காணிக்கை செலுத்தல்
- பொங்கல் வைத்தல்
- பொருள் வழங்கல்
- அன்னதானமிடல்
- தொட்டில் கட்டுதல்
- மண்சோறுத் திண்றல்

## முடிகாணிக்கை

தலைமயிரை மழிப்பது முடிகாணிக்கை ஆகும். இதனை மொட்டை போடுதல், மொட்டை எடுத்தல், முடி எடுத்தல், முடி இறக்குதல் எனவும் அழைப்பர். பொதுவாக மொட்டை அடித்தல் பழக்கம் தமிழர்களிடம் வழக்கில் கிடையாது. மூன்று நிலைகளில் மொட்டை அடிக்கும் பழக்கம் தமிழர்களிடம் உண்டு. பெற்றோர் இறந்த போது, இறப்புச் சடங்கிற்காக மொட்டை போடுகின்றனர். கடவுளிடம் வேண்டிய நேர்த்திக் கடனிற்காக மொட்டை போடுகின்றனர். தவறு செய்தால் தண்டனையாகவும் மொட்டையடிக்கப்படுகிறது. இவை தவிர்த்து துறவு நெறியில் சமண, பௌத்த துறவிகள் தலைமுடியை மழித்துக் கொள்கின்றனர்.

இவற்றுள் நேர்த்திக் கடனாக மொட்டை போடுவது தனிநபரின் வழிபாட்டில் அவரது விருப்பத்தின் பேரில் வேண்டுதல் நிறை வேறியதற்காகச் செய்யக் கூடிய நன்றிக் கடனாகும். நேர்த்திக் கடனாக ஆண்களும், பெண்களும் முடியினைக் காணிக்கையாக கோடந்தூர் முருகன், நன்செய்இடையார், கீரம்பூர் எட்டுகைஅம்மன், அனுமன்பள்ளி சின்னம்மன்,பெரியம்மன் போன்ற பண்ணைக்குலக் கோயில்களில் செலுத்துகின்றனர். குழந்தைகளுக்கு முதல் மொட்டை குலதெய்வக் கோயில்களில் போடப்படுகிறது. சிலர் குறிப்பிட்ட தெய்வத்திடம் வேண்டி அத்தெய்வம் உள்ள கோயில்களில் முடிகாணிக்கை செலுத்துகின்றனர்.

## பொங்கல் வைத்தல்

இறைவழிபாட்டில் முதன்மையான இடம் பெறுவது பொங்கல் எனலாம். நாட்டுப்புற மக்கள் தங்கள் தெய்வங்களை வணங்கும் விழாவினை கொடை அல்லது பொங்கல் என்று குறிப்பிடுகின்றனர். பொங்கல் வைப்பதை நேர்த்திக் கடனாகவும் செய்கின்றனர். அல்லது வழிபாட்டின் கூறாகவே பொங்கல் ஆக்கப்படுகின்றது. வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல் என இரண்டு வகைகளில் பொங்கல் வைக்கப்படுகின்றது. பச்சை அரிசியோடு, பாசிப்பருப்பும் சேர்த்துக்

கொள்கின்றனர். தேங்காய்ச் சில்லும், சர்க்கரையும் பொங்கலோடு சேர்த்து இனிப்பாக ஆக்கப்படுகின்றது. சுவைக்காகவும், மணத்திற்காவும் ஏலம், சுக்கு, முந்திரிபருப்பு, உலர் திராட்சை போன்றவையும் சேர்க்கப்படுகின்றன.

சர்க்கரையில் நாட்டுச் சர்க்கரை வெல்லம் மட்டுமே பொங்கலுக்குப் பயன்படுத்துகின்றனர். வெள்ளைச் சீனி பயன்படுத்துவதில்லை. உயிர்ப்பலி கொடுக்கும் போது வெண்பொங்கல் வைப்பது மரபாக உள்ளது. சர்க்கரை சேராதது வெண் பொங்கல் ஆகும். பொங்கல் வைத்து இறைவனுக்கு வாழை இலையில் படைத்து வழிபடுகின்றனர். பின்னர் வழிபடுவோர் உண்டு மகிழ்கின்றனர். பண்ணைக்குல மக்கள் தங்கள் உறவினர்கள், பங்காளிகள், மாமன் மைத்துனர்கள் அக்கம் பக்கத்தினர்களுக்கும் பொங்கலைப் பகிர்ந்து அளிக்கின்றனர். குலத்தெய்வ கோயில்களில் விழாக்காலங்களில் வைக்கப்படும் பொங்கல் ஊர்வலமாக வீதிகளின் வழியே எடுத்துச் செல்லப்படுகின்றது.

### பொருள் வழங்கல்

நாட்டுப்புற வழிபாட்டில் வணங்கப்படும் இடங்களை கட்டடம் உள்ளவை, கட்டடம் இல்லாதவை என்று இரண்டாகப் பகுக்கலாம். கட்டடம் உள்ள கோயில்களில் பராமரிப்புச் செலவு, இன்றியமையாத பொருட்கள் பெற்றிருத்தல் என பராமரிப்புச் செலவுகள் உள்ளன. நாட்டுப்புற வழிபாட்டுக்கோயில்கள் தனியொரு மன்னராலோ, செல்வந்தராலோ கட்டடப்படாதவை. அவை மக்களின் கூட்டு முயற்சியாலும் வழிபடுவோர் சொந்தச் செலவுகளாலும் கட்டப்பட்டவை.

கோயில்களுக்கு வேண்டிய, தேவையான பொருள்கள் மக்களின் பொதுப்பணத்தாலும் தனிநபர்களின் கொடையினாலும் வாங்கப்படுகின்றன. கோயில்களுக்குத் தேவையான மின்விளக்குகள், மின் விசிறிகள், நீர்த்தொட்டி, வாசல் கதவுகள், மின் இயந்திர மேளம், மணி, சுவரோவியங்கள் விளம்பரப் பலகைகள் போன்றவையாவும் தனி நபர்களின் நேர்த்திக்கடனாகவோ அல்லது இலவசமாகவோ பெறப்படுகின்றன. வாழ்க்கையில் பொருளாதார நிலையில் முன்னேறி வசதிவாய்ப்புடன் வாழ்பவர்கள் கோயில்களுக்குத் தேவையான பொருள்களைத் தங்களது பெயர் பொறித்து வழங்குகின்றனர்.

சிலர் அரசுப் பணி கிடைத்திடக் கடவுளை வேண்டி, அரசு வேலை கிடைத்த பின்னர் நேர்த்திக்கடனாக ஏதேனும் பொருள்களை கோயிலுக்கு வழங்குகின்றனர். பண்ணைக்குல மக்கள் கோயிலுக்கு வழங்கும் நேர்த்திகடன்களாக, இயந்திர மேளம், மணி, ஊஞ்சள், மின்விளக்குகள், சுவர் கடிகாரம், அலங்கார ஆபரணங்கள், மின் விசிறிகள், இன்னும் பல பொருட்களைக்கொண்டு தங்கள் நேர்த்திகடன்களாக கோயிலுக்கு செலுத்துகின்றனர்.

### அன்னதானமிடல்

அன்னதானமிடுதல் தமிழகத்தில் மிகவும் தொன்மையான காலத்திலிருந்தே நடைமுறையில் இருக்கும் பழக்கமாகும். திரளான மக்களுக்கோ ஒரு சிலருக்கோ தனது இல்லத்திலோ பொது விடத்திலோ உணவளிப்பது அன்னதானமாகும். அன்னதானம் சமயச்சடங்கோடு மட்டுமின்றி, பசித்தவர் பசியைப் போக்கிடும் நோக்கிலும் செய்யப்படுகின்றது. பாரதப்பெரும் போர் நடந்த நாள்களில் சேரமன்னனான உதியன் சேரலாதன் கௌரவர்களை எதிர்த்துப் போராடிய பாண்டவர்களுக்கு உணவு வழங்கினான். இதனை முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர்,

> "அலங்குளைப் புரவி ஐவரோடு சினை
> நிலந்தலைக்
> கொண்ட பொலம்பூந் தும்பை களத்து
> ஒழியப்
> பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது
> கொடுத்தோய்"[5]

எனப்பாடுகின்றார். அவ்வாறு உணவு வழங்கிய மன்னனும் வரலாற்றில் சேரமான் பெருஞ்சோற்று



Scanned with CamScanner

உதியன் சேரலாதன் எனச் சிறப்பிக்கப்படுகின்றார். மணிமேகலைக் காப்பியமும் உணவு அளிப்பதன் சிறப்பினை,

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு
எல்லாம் உண்டி
கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே"[6]

எனப்பாடுகின்றது. அன்னதானம் வழங்குவது பசியைப் போக்குவதோடின்றி, அன்னதான-மிட்டோருக்கு புகழினையும், சிறப்பினையும் சேர்க்கின்றது. சிறு தெய்வ வழிபாட்டில் அன்னதானமிடல் என்பது ஒரு நேர்த்திக் கடனாக உள்ளது. வாணிபர்கள் தங்களது வாணிபம் பெருகி நல்ல இலாபம் மழை பெய்து நிலம் செழிக்கவும் அன்னதானம் செய்கின்றனர். இவ்வாறு வசதியானவர்கள் தவிர்த்து, பக்தர்களும் ஒன்று கூடி கூட்டாக பணம் வசூல் செய்து அன்னதானமிடுகின்றனர்.

அவ்வாறு வசூல் செய்கையில் அன்னதானத்திற்கு கொடுத்து உதவினால் பெரும் புண்ணியம் கிட்டும் என்ற நம்பிக்கையில் பக்தர்கள் ஆர்வத்துடன் பொருளுதவி கொடுக்கின்றனர். பணமாகவோ அரிசியாகவோஅன்னதானத்திற்கு மக்கள் கொடுத்து உதவுகின்றனர். அது தவிர்த்து கோயில் நிர்வாகமும் வழிபடுவோர் சார்பாக அன்னதானம் இடுகின்றது. பண்ணைக்குல மக்கள் கும்பாபிசேகம், மற்றும் திருவிழாக்காலங்களில் இன்றும் அன்னதானமிடுவது வழக்கமாக கொண்டுள்ளனர். மேலும் அம்மாவாசை, பௌர்ணமி அடிக்கிருத்திகை, போன்ற நாட்களிலும் கூட்டாக சேர்ந்து அன்னதானமிட்டு வழிபடுகின்றனர்.

### தொட்டில் கட்டுதல்

திருமணம் முடித்து நீண்ட காலமாகக் குழந்தைப் பேறு கிடைக்காதவர்கள் குழந்தை வரம் வேண்டி குலத் தெய்வத்திடம் வேண்டிக் கொள்கின்றனர். தங்களுடைய வேண்டுதல் நிறைவேறி குழந்தைப் பேறு கிடைத்தால் தொட்டில் கட்டிப் போடுவதாக வேண்டிக் கொள்கின்றனர். குழந்தை பேறு வேண்டுவோர் முதலில் கோயிலிலுள்ள மரத்தில் ஒரு சிறு வெள்ளைத் துணியில் தொட்டில்கட்டி தொங்கவிடுகின்றனர். தொங்குகின்ற தொட்டிலில் ஒரு சிறு கல்லைக் குழந்தையாக எண்ணிப் போட்டு ஆட்டுகின்றனர்.

தங்களுக்குக் குழந்தை பிறந்து அதனைத் தொட்டிலில் போட்டு ஆட்டும் பெரும்பேறு தங்களுக்குக் கிட்ட வேண்டும் எனக் கடவுளிடம் வேண்டுகின்றனர். குழந்தைப் பேறு கிடைத்தவுடன் மரப்பலகையில் தொட்டில் செய்து கோயிலுக்குத் தொட்டிலையும் குழந்தையினையும் எடுத்துச் செல்கின்றனர். தெய்வத்தின் முன்னர் தொட்டிலில் குழந்தையை வைத்து தேங்காய், வாழைப்பழம், சூடம், பத்தி, பூ, வெற்றிலைபாக்கு, எலுமிச்சை ஆகியவற்றைப் படையலாகச் செய்து வழிபட்டு நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர்.

### மண்சோறு தின்றல்

இலையில் சோறு போடாது மண்தரையில் சோறு போட்டு, குழம்பு ஊற்றிச் சாப்பிடுவது மண் சோறு தின்றல் ஆகும். இது பெரும்பாலும் பெண்களாலே செய்யப்படுகின்றது. தங்கள் குழந்தைகளோ, கணவனோ நோய்வாய்ப் பட்டிருக்கையில் குணமடைவதற்காக பெண்கள் மண்சோறு தின்ன நேர்ந்து கொள்கின்றனர். இந்நேர்த்திக்கடன் திருவிழா நாள்கள் என்று மட்டுமின்றி நோய்பிடிக்கப்பட்ட நாள்களிலே கூட நிறைவேற்றப்படுகின்றது. இந்நேர்த்திக் கடன் பிணியால் பாதிக்கப்பட்டவர் செய்வதில்லை.

பிணியால் பாதிக்கப்பட்டவர் குணமாக மற்றவர்களால் செய்யப்படுகின்றது. இந்நேர்த்திக் கடனைச் செய்யும் பெண்கள் தங்கள் குழந்தைகள், கணவன்களுக்கு நோய்விலகி நீண்ட நாள் ஆயுள் கூடும் என நம்புகின்றனர். இந்நேர்த்திக்கடன் பண்ணைக்குலத்திற்கு உட்பட்ட அனுமன்பள்ளி சின்னம்மன், பெரியம்மன், ஏளூர் பண்ணையம்மன் கோயில்களில் மட்டும் இவ்வகையான வேண்டுதலைச் செய்கின்றனர்.



Scanned with CamScanner

## முடிவுரை

நம்பிக்கை என்பது, சான்றுகளின் அடிப்படையிலோ, காரண காரியத் தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூட நம்பிக்கை என்றும் வகைப்படுத்தியுள்ளனர். மனித வாழ்வில் காணப்படும் நம்பிக்கைகளுக்குக் காரணம் அறியமுடியவில்லை என்றாலும் மனித சமுதாயம் நம்பிக்கை வயப்பட்டுச் செயல்படுவதைக் காண்கிறோம்.

## தொகுப்புரை

- கொங்கு வேளாளர் தங்களது குல தெய்வங்களை வழிபட்டுத் தொடங்கும் செயல்கள் நன்கு நிறைவேறினால் நேர்த்திக்கடன் செலுத்துவதாக வேண்டிக் கொள்கின்றனர்.
- நேர்த்திக்கடன் நிறைவேறியவுடன் மெரமனை எடுத்தல், மொட்டையடித்தல், அபிடேகம் செய்தல், கிடாய் வெட்டுதல் முதலான நேர்த்திக்கடன்களைச் செய்கின்றனர்.
- கொங்கு வேளாளர் குலதெய்வக் கோயில்களில் திங்கள், வெள்ளிக் கிழமைகளில் வாரவழிபாடும், தமிழ்வருடப்பிறப்பு, ஆடிப்பதினெட்டு, புரட்டாசி வெள்ளிக் கிழமைகள், தீபாவளி, கார்த்திகை தீபம், மார்கழி மாதம், பொங்கல், சிவராத்திரி, அமாவாசை ஆகிய தினங்களில் சிறப்பு வழிபாடுகளும் நடைபெறுகின்றன.
- கொங்கு வெள்ளாளக் கவுண்டர்களது வாழ்வில் இடம்பெறும் குலச் சடங்குகள் பெரும்பான்மையும் அறிவியல் சார்ந்தவையாகவும் சில மட்டும் பண்பாட்டு அடிப்படையிலும் அமைந்துள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. பழனி வட்டார நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு, வ. தமிழரசி, ப-79, ப.ஆ 2014, சரஸ்வதி வாசகம், புதிய எண் 10/2, போலீஸ் குவார்ட்டர்ஸ் சாலை, தி.நகர்.
2. அகநானூறு, புலியூர் கேசிகன், ப.எண்-236, ப.ஆ 1998, பாரிநிலையம், 90 பிராட்வே, சென்னை 600108.
3. நாட்டுப்புற இயல் ஆய்வு, சு. சக்திவேல், ப-151, ப.ஆ 1996, 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை 600001.

https://teams.microsoft.com/l/meetup-join/19%3ameeting_ NDY5YmIzNDItMzIxMC00ZDYwLWI1ZjktM2I4MDEwYzBiZTcw%40thread.v2/0?context=%7b%22Tid%22%3a%2245005fbb-6104-4ba6-945f-00ca4bf882dc%22%2c%22Oid%22%3a%223e25b857-a1f3-49ba-9eff-b3a3229aef34%22%7d

❧



Scanned with CamScanner